

சென்னை எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், நேற்று (15.08.2023) பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்துகொண்டார்.



சென்னை திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயில், நேற்று (15.08.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்துகொண்டார்.



சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில், நேற்று (15.08.2023) தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்துகொண்டார்.



இந்திய சுதந்திர தின விழாவை முன்னிட்டு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டார். உடன் செயல் அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (15.08.2023) இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் சென்னை, தம்புசெட்டித் தெரு, காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டார்.

### ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் - மஸ்கட்டில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு புகழஞ்சலி!

## சிவக்குமார் - பாலமுருகன் - சிவசெந்தில் பங்கேற்பு!

மஸ்கட், ஆக. 16-

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்ச்சி மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் போது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் புகைப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. கலைஞரின் சாதனைகள், கவிதைகள், கட்டுரைகள், திரைத்துறையில் அவரது வசனங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள், இலக்கியம் சம்பந்தமான வரலாற்று சுவடுகளை அனைவரும் எடுத்துரைத்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

ஆண்டுகள் ஐந்து ஆயினும் அவர் விட்டுச் சென்ற காலச்சுவடு செய்திகள் அவர் நம்மிடையே வாழ்ந்து வருகிறார் என்ற உணர்வு தான் அனைவருடைய இதயத்திலும் மேலோங்கி நின்றது. கலைஞர் என்ற மந்திரச்சொல் நம் உள்ளத்தோடு நெருங்கி பயணித்துக் கொண்டே இருக்கிறது. தமிழ் சமூக வரலாற்றில் கலைஞரின் சகாப்தம் ஒரு தனி இடத்தை என்றென்றும் பெற்றிருக்கும் என்பதனை இங்கு பேசிய இளைஞர்கள் உரைகளில் காண முடிந்தது.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார், தலைவர் பாலமுருகன், பொருளாளர் சிவ செந்தில், இளைஞர் அணி செயலாளர் திருமா வளவன், இளைஞர் அணி துணைச் செயலாளர் தங்கதுரை, பர்ஷாத், மாணிக்கவேல், செல்வின், ராஜன், அசோக், முருகன், மற்றும் பல்வேறு அணியை சார்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு கலைஞருக்கு புகழஞ்சலியை செலுத்தினர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! திருவொற்றியூர் மேற்கு பகுதியில்

# மாபெரும் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

சென்னை, ஆக.16-

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞரின் நூற்றாண்டு விழா அஜாக்ஸ் பேருந்து பணிமனை அருகில் நடைபெற உள்ளது. இந்த மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நல திட்டம் உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சி பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர்.

இந்த நிகழ்வில் 1-வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு எம்.சி., 2வது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி. பொருளாளர் எம்.ஆனந்தன்.

விழாவில் பகுதி கழக நிர்வாகிகள், அவைத்தலைவர் ந. திருசங்கு, துணை செயலாளர்கள் யு.எஸ். குறளரசன், இ.குமரவேல், ஏ.இந்துமதி, பொருளாளர் எம்.வஜ்ஜிரவேல், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், 5-வது வட்டம் கே.பி சொக்கலிங்கம் எம்.சி.

3-வது வட்டம் பி.தமிழரசன் எம்.சி., 1-வது வட்டம் மு.சிவகுமார் எம்.சி. 3(அ) வது வட்டம் மு. மாணிக்கவேலன், 4-வது வட்டம் கே.பவுல், 6-வது வட்டம் கி.கண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் என். ராம்குமார், எம். சந்திரகுமார், ஆர்.மோகனசுந்தரம், ஜி. தினேஷ், பொன். கோ.விஜயன், பி.வீரமுத்து, எஸ்.ஆர். மலைராஜ், எஸ்.கணேஷ், எஸ். மகேந்திரன்,இ.வி. சரவணன், எஸ்.ஆறுமுகம், அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கழகத்தின் மூத்த முன்னோடிகள் தவறாமல் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.




### சுதந்திர தின விழா: சென்னை மாநகராட்சி

# ரிப்பன் கட்டட வளாகத்தில் தேசியக் கொடியை மேயர் ஆர்.பிரியா ஏற்றினார்!

## துணை மேயர் மு.மகேஷ்குமார் - அரசு அலுவலர்கள் பங்கேற்பு!



இந்திய சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (15.08.2023) தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

சென்னை, ஆக. 16-

பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று (15.08.2023) இந்திய சுதந்திரத் திருநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

அதனைத் தொடர்ந்து, மேயர் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களின் கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சியில் அதிக சொத்துவரி செலுத்திய 3 நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும், முறையாக உரிய காலக்கெடுவிற்குள் சொத்து வரி செலுத்திய 3 சொத்து உரிமையாளர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மேயர் பிரியா வழங்கி பாராட்டினார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 128 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், தேசிய மாணவர் படை, சாரண சாரணியர்கள் மற்றும் கலை நிகழச்சிகளின் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர்கள் சங்கர்லால் குமாவத், (சுகாதாரம்) திருமதி ஆர்.லலிதா, (வருவாய் (மநிதி), இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), எம்.பி.அமித், (தெற்கு), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), நே.சிற்றரசு (பணிகள்), த.இளைய அருணா (நகரமைப்பு), த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.